

# தமிழ் இலக்கியங்களில் காலமும் சூழலும்



தொகுப்பாசிரியர்

**ப.பிரதாப்**



காலத்திற் கேற்ற வகைகள் அவ்வக்
காலத்திற் கேற்ற ஒழுக்கமும் நூலும்
ஞால முழுமைக்கும் ஒன்றாய் எந்த
நாளும் நிலைத்திடும் நூலொன்று மில்லை

சுப்பிரமணிய பாரதியார்

ISBN 819379638-1
9788193796382

தமிழ் இலக்கியங்களில் காலமும் சூழலும்
(பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக்கோவை)

தொகுப்பாசிரியர்
ப. பிரதாப்

உரிமை
ஆசிரியருக்கே

முதற்பதிப்பு
அக்டோபர், 2019

வெளியீடு
தமிழ்த்துறை, என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி

வடிவமைப்பு, அச்சு
பாலகீதா மீடியா, பொள்ளாச்சி, 99761 44451

பக்கங்கள் : 18 + 398 = 416

விலை: ரூ. 450/-

ISBN : ISBN 819379638-1
9788193796382

# 47. பக்தி இலக்கியங்களில் சைவ வைணவச் சூழலியல்

வெ.முருகேஸ்வரி
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, என்.ஜி.எம். கல்லூரி,
பொள்ளாச்சி.

உலக இலக்கியங்களில் தமிழ் இலக்கியங்கள் மிக தொன்மை உடையது. வரலாற்று சிறப்பும் பண்பாட்டுப் பெருமையும் உடைய இலக்கியம் நம் தமிழ் இலக்கியமாகும். "கல்தோன்றி மண்தோன்றா காலத்தே வாளோடு முன்தோன்றிய மூத்தகுடி" தமிழ்க்குடியின் தொன்மை உரைப்பர். தமிழ் இலக்கியம் ஏறக்குறைய இருபத்தைந்து நூற்றாண்டுகளின் வரலாறு உடையது. தொடக்கத்தில் தமிழ்நாட்டில் பிறமொழிகளின் தாக்கம் குறைவாக இருந்த காரணத்தால் ஆங்கங்கே வழங்கி வந்த நாட்டுப்புறப் பாடல்களில் இருந்தே புலவரின் பாடல்கள் அமைக்கப்பட்டு தோன்றின. தென்னிந்தியாவின் மற்ற திராவிட மொழிகளின் இலக்கியங்கள் கி.பி. எட்டாம் நூற்றாண்டுக்குப் பிறகு தோன்றியவை. ஆகையால், அதற்கு முந்தைய 12 நூற்றாண்டு காலத் தமிழிலக்கியம் ஒரு கூட்டுக் குடும்பத்தின் முதல் குழந்தை போல் தனியே வளர்ந்து வந்தது இந்தியாவின் இலக்கிய மொழிகளாக அமைக்கப்பட்டிருந்தது இரண்டு ஒன்று தமிழ் மற்றொன்று சமஸ்கிருதம் இவற்றில் போல் வளர்ந்து கொண்டே வரும் நம் தமிழ் இலக்கியங்கள் எண்ணற்றவை இலக்கியம் காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்வதை தான் புதிய புதிய வகைகள் தோன்றுகின்றன. இவற்றில் சைவ வைணவ இலக்கியங்கள் பற்றி நாம் காண்போம்.

## சைவ வைணவ இலக்கியங்கள்

களப்பிரர் ஆட்சியில் தமிழகத்தில் சமயங்களை சைவ, வைணவ சமயங்கள் அடங்கி ஒடுங்கி சமண, பௌத்த சமயங்கள் எழுச்சியுற்றனர். பல்லவர் காலத்திலே இச்சமயங்கள் வேரூன்றிய

போது நாயன்மார்களும் ஆழ்வார்களும் தோன்றி அகச் சமயங்களுக்கு புத்துயிர் ஊட்டினர்.

## பக்தி இலக்கியம்

பக்தி இயக்கத்திற்கு தொடக்கமாக ஆறாம் நூற்றாண்டில் நாயன்மார்களில் திருமூலரும் காரைக்கால் அம்மையார் இயற்றிய பாடல்கள் உதவின. ஆழ்வார்களில் பேயாழ்வார், பூதத்தாழ்வார், பொய்கையாழ்வார் ஆகிய முதலாழ்வார் மூவரும் பாடிய பாசுரங்கள் அவ்வாறு உதவின.

## திருமூலர் திருமந்திரம்

திருமந்திரம் என்ற சிறந்த நூலை இயற்றியவர் திருமூலர் என்ற பெரியார் ஆவார். இவர் சைவ நாயன்மார்களில் ஒருவராக திருத்தொண்டத்தொகை குறிப்பிடுகிறது. இவரை அப்பர், சம்பந்தருக்கு முற்பட்ட நாயன்மாராக ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். திருமூலர் மூவாயிரம் பாடல்கள் பாடியுள்ளார். இவரின் தத்துவ கருத்துக்கள் முதல், யோகநெறி, சித்தவைத்திய கருத்துக்கள் வரையில் பலவும் செறிந்த நூல் அது. பக்தியின் சிறப்பை அறிவுறுத்தும் இடத்தில் அவர், "அன்பு சிவம் என்பது இரண்டு பொருள் அல்ல, அன்பே சிவம் என்பதை உணர்ந்தவர் சிலரே, அவர்களின் ஞானிகள் அவர்களே கடவுள் தன்மை பெற்றவர்கள்" என்கிறார்.

"அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமரசுந்திருந்தாரே"

மரணம் உணர்த்தும் நிலையாமை பற்றிய உண்மை எவ்வளவு பெரியது! அதைத் திருமூலர் சொல்லும் முறையோ மிக எளியது! ஊரார் கூடுகிறார்கள் ஒலி எழுப்ப அழுகிறார்கள் பழைய பெயரை விட்டு பணம் என்று பெயர் சொல்கிறார்கள். சுடுகாட்டுக்கு கொண்டு போய் விடுகிறார்கள்.

"ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்ட"

பிறகு நீரில் மூழ்கி குளித்து விட்டு அந்த நினைப்பும் இல்லாமல் மறந்து விடுகிறார்கள். ஊரெல்லாம் ஒலிக்க அழுதிட்டு பேரினை நீக்கிப் பணமென்று பேரிட்டு சூரியன் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு நீரினில் மூழ்கி நினைப் பொழிந்தார்கள். இவ்வாறு மூவாயிரம் பாடல்களை அரிய பெரிய உண்மைகளை எல்லாம் தெளிவாக கூறுகிறார்.

காரைக்கால் அம்மையார் ஆறாம் நூற்றாண்டில் காரைக்கால் என்ற ஊரில் ஒரு வணிகருக்கு மனைவியாக இல்லறம் நடத்தி வந்தபோது அவருடைய வாழ்க்கையில் அற்புதச் செயல் ஒன்று நடந்தது. அது கண்டவுடன் கணவருக்கு மனைவியிடம் இருந்த காதல் நீங்கி மதிப்பும் அச்சமும் ஏற்பட்டன. எனவே கணவர் அம்மையாரை விட்டு நீங்கி வேறொரு திருமணம் செய்து வாழத் தொடங்கினார். அதை அறிந்த காரைக்காலம்மையார் இனிமேல் இந்த இளமையும் அழகும் யாருக்காக என்று வெறுத்தார். ஒரு பேய் போல் திரிந்து சிவபெருமானைப் பாடி உருகி திருவாலங்காடு என்னும் ஊருக்குச் சென்று வழிபாடு செய்து முக்தி பெற்றார். தன்னை காரைக்கால் பேய் என்று பாடலில் குறிப்பிட்டுக் கொள்கிறார். அவர் பாடிய பக்திப்பாடல்கள் அற்புதத் திருவந்தாதி, இரட்டை மணிமாலை, மூத்த திருப்பதிகங்கள் என்று மூன்று நூல்களாக உள்ளன.

## வைணவ இலக்கியங்கள்

திருமாலை முழுமுதல் கடவுளாகக் கொண்ட சமயம் வைணவம் சைவத்தை போலவே வைணவமும் வைதிக சமயம் ஆகும். சமண பௌத்த சமயங்கள் வேத நெறிக்கு புறம்பானவை.

முதலாழ்வார் மூவர், பன்னிரு ஆழ்வார்களுள் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்ற மூவரும் முதல் ஆழ்வார் என பெறுவார். இம் மூவரும் ஒரே காலத்தவர். ஒரே திங்களில் அடுத்தடுத்து பிறந்தமையால் தாமரை, குருக்கத்தி, செவ்வல்லி, முதலிய மலர்களின்றும் தோன்றியமை போன்ற ஒப்புமையாளும் இவர்கள் முதலாழ்வார் மூவர் என்று அழைப்பர்.

பொய்கை ஆழ்வார்

இவர் பொய்கையில் பிறந்ததால் இப்பெயர் பெற்றார். காஞ்சிபுரத்தில் ஐப்பசித் திங்களில் திருவோண நட்சத்திரத்தில் 'பாஞ்சசன்னியம்' என்னும் சங்கின் அம்சமாகப் பிறந்தவர். முதன்முறையாக திருமாலின் பத்து அவதாரங்களைப் பாடிய பெருமை இவரையே சாரும். திருக்கோவிலுக்குச் சென்று வழிபட்ட பின் அன்பர் ஒருவர் வீட்டின் இடைகழியில் துயிலக் கருதினார். அதுகாறும் அங்கே சென்று இடம் வேண்டி அவருடன் இருந்தார். பூதத்தாழ்வாரும் அங்கு வந்து இடம் வேண்டினார். ஒருவர் படுக்கவும் இருவர் இருக்கவும் மூவர் நிற்கவும் இடம் இருந்தது அப்போது இருவருக்கும் இடையில் யாரோ ஒருவர் இவரையும் நெருங்குவது தெரிந்தமையால் அவர் யார் என்று ஆராய்ந்து திருமால் என்று அறிந்து பின்வரும் பாடல்களை பாடினார். இந்நிகழ்ச்சி முதல் திருவந்தாதி 86 ஆம் பாசுரத்தில் குறிக்கப்பெற்றுள்ளது.

பொய்கையார்

"வையம் தகளியா வாரசுகடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக-செய்ய
சுடர் ஆழியான் அடிக்கே சுட்டினேன் சொன்மாலை
இடராழி நீங்குகவே என்று".

பூதத்தாழ்வார்

ஐப்பசி அவிட்ட நட்சத்திரத்தில் மாமல்லபுரம் எனப்படும் திருக்கடல் மல்லை குருக்கத்தி (மாதவி) மலரில் தோன்றியவர். இவர் கதாயுதத்தை அவதாரமாகும். 'பூதம்' என்னும் சொல்லை பல இடங்களில் பயன்படுத்தியுள்ளதால் இப்பெயர் பெற்றார்.

"அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா நன்புருகி
ஞானச் சுடர் விளக்கு ஏற்றினேன் வாரணற்கு
ஞானத் தமிழ் புரிந்த நான்".

என்று பாசுரத்தில் பாடியுள்ளார்.

### பேயாழ்வார்

சென்னை மயிலாப்பூரில் செவ்வந்தி பூவில் பிறந்தவர். ஐப்பசி சதய நட்சத்திரத்தில் நந்தகம் என்னும் வாளின் அம்சமாக பிறந்தார். இவர் பக்தி மேலீட்டால் அழுது சிரித்து ஆடிப்பாடி பேய் பிடித்தவர் போல் இருந்ததால் இப்பெயர் பெற்றார்.

"திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கன் அணி நிறமும் கண்டேன் செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரி சங்கம் கைக்கண்டேன்
என்னாழி வண்ணன்பால் இன்று".

### முடிவுரை

காலச்சூழல் ஆட்சி நிலை, மக்களின் போக்கு ஆகிய நிலைகளுக்கு ஏற்பவே இலக்கியத்திலும் பெரும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. எனவே, காலத்திற்குக் காலம் இலக்கிய போக்கு மாறுகின்றது. இந்நிலையில் சங்ககாலத்தில் சொற்செறிவு மிக்க தனி செய்யுட்கள் தோன்ற இடைக்காலத்தில் தொடர்நிலைச் செய்யுற்கள் காப்பியங்கள் எழ, பிற்காலத்தில் பிரபந்தங்களும் புராணங்களும் தோன்றின. இக்காலத்தில் சமுதாய தேவைகளுக்கு ஏற்ற இலக்கியங்கள் நாளும் நாளும் உருவாகி வருகின்றன. காலத்திற்குக் காலம் இலக்கியம் பாங்கு மாறுவதால் இலக்கிய வரலாறு கால அடிப்படையில் பகுக்கப் பெற்றுள்ளது என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறிந்துகொள்ள முடிகிறது.

### பார்வை நூல்கள்

பன்னிரு திருமுறை வரலாறு - வெள்ளைவாரணன்

தமிழ் இலக்கிய வரலாறு — மு.வ

நாலாயிர திவ்ய பிரபந்தம்